செ.வெ. எண்: 295 நாள்: 18.05.2012

**சென்னைப் பெருநகரில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவியின் சேவை விரைவில் துவக்கம் – செட் டாப் பாக்ஸ் தேவை எண்ணிக்கையை தெரிவிக்க ஆபரேட்டர்களுக்கு வேண்டுகோள்.**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தற்போது தமிழகத்தின் 31 மாவட்டங்களில் (சென்னை நீங்கலாக) தனது கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது. சென்னை மாநகரில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் இதன் சேவை விரைவில் துவங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் விரைந்து எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னையில் புதிய டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறையை நிறுவி 500 சேனல்களை வழங்க உள்ளது. அதில் 20 சேனல்கள் HD சேனல்கள் ஆகும். டிஜிட்டல் சிக்னல்களை பெற்று டிவி பார்ப்பதற்கு தேவைப்படும் செட்–டாப் பாக்ஸினை வாங்கி நியாயமான விலையில் சந்தாதாரர்களுக்கு வழங்க உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவையை சென்னையில் துவங்க தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவும், கேபிள் டிவி சேவையை விரைவில் ஆரம்பிக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இதற்கான பணிகளை விரைந்து மேற்கொண்டு வருகிறது.

இந்திய அரசு இயற்றியுள்ள கேபிள் டிவி திருத்தச்சட்டம் 2011ன்படி, சென்னை உள்ளிட்ட 4 பெருநகரங்கள் 30.06.2012க்குள் டிஜிட்டல்மயமாக்கப்பட வேண்டும் எனவும் 01.07.2012 முதல் டிஜிட்டல் சிக்னல் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு தெரிவித்துள்ள காலக்கெடு மிகவும் குறைவாக இருப்பதாலும், டிஜிட்டல் முறையில் கேபிள் டிவி சேவையை ஆரம்பிக்க செய்ய வேண்டிய பணிகள் அதிக அளவில் இருப்பதாலும், சென்னை மாநகரில் டிஜிட்டல் முறையில் கேபிள் டிவி வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவினை 6 மாதங்களுக்கு நீட்டிக்கக் கோரி மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

_ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னையில் கேபிள் டிவி சேவையை வழங்குவதற்குத் தேவையான உபகரணங்களை வாங்க விரைவில் டெண்டர் கோர உள்ளது. இதற்கான டெண்டர் கோரப்பட்டு, உபகரணங்கள் வாங்கி நிறுவிய பின்னர், சென்னையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் கேபிள் டிவி சேவை விரைவில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகரப் பகுதிகளில் உள்ள, தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள சந்தாதாரர்களுக்கு வழங்குவதற்காக எவ்வளவு செட்–டாப் பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விவரத்தினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் வெப்சைட்டில் (www.arasucable.com) உள்ள படிவத்தில் ஆன்லைனில் 31–05–2012க்குள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்காள்.

மேலும் சென்னையில் கேபிள் டிவி ஆபரேட்டராக இருந்து, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்யாமல் விடுபட்ட ஆபரேட்டர்கள் தங்கள் தொடர்பான விவரங்களையும் தங்களுக்குத் தேவையான செட்–டாப்–பாக்ஸ் தேவையையும் 31–05–2012க்குள் பதிவு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: – **இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.